# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064812
8/AC/2019/CC-I

1. District : மாவட்டம் சென்னை
PS: காவல்நிலையம் CC-I Dett, V&AC
Year: ஆண்டு 2019
FIR No.: மு.த.அ. எண்
Date: நாள் 13.06.2019 1000 Hrs.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018
Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்: u/s 7 of PC (Amendment) Act 2018
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 10.06.2019
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை @ 03.30 pm.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : நேரம் 13.06.2019
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம் 0900 Hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 KM வடக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி தமிழ்நாடு சிறப்பு பணி மாற்று ஊனியம் பார்லேட் அலுவலகம்-7, கே.கே.நகர், சென்னை-78.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. V. சிவாஜி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o K.P. ரெட்டி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 65/2019
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் பணி ஓய்வு
(g) Address : முகவரி எண். 91, சிவகாமி நகர், 3வது தெரு, சேலையூர், சென்னை-73.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ஜெனிஸ் - RI, தமிழ்நாடு சிறப்பு பணி மாற்று ஊனிய பார்லேட் அலுவலகம்-7, கே.கே.நகர், சென்னை-78.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Separate sheet Enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Insr. CCI 13/06/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு V. [signature] 13.6.19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் C. SASIKALA

Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police, V&AC, CC-I Det, Alandur, Chennai-16.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.06.2019 @ 1100 hrs.

முதல் தகவல் அறிக்கை Column -12ன் தொடர்ச்சி :

I received the complaint from one V.Sivaji, M/A 65/2019, S/o. K.P.Vembadi, No.91, Karpagam Nagar, 3rd Street, Selaiyur, Chennai-73 on 13.06.2019 at 9.00 hrs. which runs as follows:- 13.06.2019, அனுப்புநர், V.சிவாஜி, வயது 65, S/o. K.P. வேம்படி, No.91, கற்பகம் நகர், 3வது தெரு, சேலையூர், சென்னை-73, பெறுநர், உயர்திரு. ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-1, செ-16, ஐயா, நான் சென்னை சேலையூரில் சுமார் இருபது வருடங்களாக வசித்து வருகிறேன். நான் SBI வங்கியில் மெசென்ஜராக பணிபுரிந்து 2014 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். கடந்த 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் விண்ணப்பித்து குறைந்த வருவாய் பிரிவினருக்கான குடியிருப்பு எண் 430ஐ தரமணி டைட்டில் பார்க் அலுவலகத்தின் பின்பக்கம் உள்ள கானகம் திட்டப்பகுதி என்கிற குடியிருப்பு வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப் பெற்றேன். எனக்கு ஒதுக்கீடு செய்யும் போது அதற்கான மொத்த தொகை ரூபாய் இரண்டரை லட்சத்தில் 30% ஐ செலுத்தி மீதம் உள்ள தொகையினை மாதாமாதம் ரூபாய் 1351/- வீதம் 15 வருடங்களுக்கு செலுத்தும் வகையில் தற்காலிக மனை ஒதுக்கீட்டு ஆணையை பெற்றேன். அதன்படி நான் தொடர்ச்சியாக 2015ம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை முழுமையாக செலுத்திவிட்டேன். பிறகு என்னுடைய குடும்ப சூழ்நிலை காரணமாக காலதாமதம் ஆகி ஜூலை 2018ம் வருடம் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய எஸ்டேட் அலுவலகம்-7, கே.கே.நகர், சென்னை-78 என்ற முகவரியில் உள்ள அலுவலகத்திற்கு சென்று என்னுடைய குடியிருப்பிற்கான Saledeed பெறுவதற்காக, நான் ஏற்கனவே மேற்படி குடியிருப்பு சம்மந்தமாக செலுத்திய தொகைகளுக்கான ரசீதுகளை இணைத்து விண்ணப்பம் கொடுத்தேன். அதனை பெற்றுக் கொண்டு அலுவலகத்தில் இருந்தவர்கள் மேற்படி ரசீதுகளை அலுவலக ஆவணங்களுடன் சரிபார்க்க வேண்டும் என்றும் அதற்கு பின்பு தான் மேல் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவித்தனர். பிறகு என்னுடைய வயது மூப்பின் காரணமாக என்னால் அடிக்கடி சென்று பார்க்க முடியவில்லை. ஓரிரு மாதங்களுக்கொரு முறை மேற்படி அலுவலகம் சென்று பார்த்து வந்தேன். அங்கிருப்பவர்கள் யாரும் இது பற்றி சரியாக விவரம் தெரிவிக்கவில்லை. பிறகு கடந்த மே மாதம் முதல் வாரத்தில் கே.கே.நகர் குடிசை பகுதி மாற்று வாரியம்-7 எஸ்டேட் அலுவலகத்திற்கு மாலை சுமார் 03.00 மணியளவில் சென்று அங்கு உதவியாளராக இருக்கும் திரு.கமலக்கண்ணன் என்பவரை பார்த்தேன். அவர் இன்னும் ரசீது சரிபார்த்து முடிக்கவில்லை, மேலும் நீங்கள் RI திரு.லெனின் என்பவரை சந்திக்கும்படி சொல்லியிருந்தார். நான் 10.06.2019ம் தேதி மீண்டும் கே.கே.நகர் குடிசை பகுதி மாற்று வாரியம்-7 எஸ்டேட் அலுவலகத்திற்கு மாலை சுமார் 03.30 மணியளவில் சென்று RI திரு.லெனின் என்பவரை சந்தித்து என்னுடைய குடியிருப்பின் Sale Deed சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் அலுவலகத்திலிருந்த திரு.கமலக்கண்ணன் அசிஸ்டெண்டை அழைத்து என்னுடைய விண்ணப்பம் சம்மந்தமாக கேட்டார். அவர் அலுவலகத்திலிருந்த கோப்பினை எடுத்து RI திரு.லெனின் அவர்களிடம் கொடுத்தார். RI அதனை

பார்த்துவிட்டு பணம் ரூ.20,000/- கொடுத்தால் உன் வீட்டிற்கான Sale Deed பெற ஏற்பாடு செய்கிறேன் என்றார். பணத்தை அலுவலகத்திலேயே அவரிடம் கொடுக்க வேண்டும் என்றார். நான் ஏற்கனவே குடிசை மாற்று வாரியத்திற்கு பணம் கட்டியிருக்கிறேன். அதற்கான ஆவணங்களை இத்துடன் இணைத்து தங்களது அலுவலகத்தில் கொடுத்துள்ளேன். மேற்கொண்டு எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் உன்னுடைய குடியிருப்பிற்கான Sale Deed பெறுவதற்காக பரிந்துரை செய்து அதனை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி அங்கிருந்து வாங்கித் தருவதற்கு எனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் அதை கொடுக்கவும வழியில்லை என்றும் RI திரு.லெனின் அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர் ரூ.5,000/- மட்டுமாவது எனக்கு தனியாக கொடுத்தால் தான் நான் உன்னுடைய மனுவின் பேரில் பரிந்துரை செய்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பேன் என்றும் அதன்பிறகு நீ தலைமையகம் சென்று Sale Deedஐ வாங்கிக் கொள் என்றும் பணம் கொடுக்காவிட்டால் உனது விண்ணப்பத்தை நான் பரிந்துரை செய்து அனுப்பமாட்டேன் என்றும் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். அதோடு இன்னும் ஓரிரு நாளில் பணத்தை கொண்டு வந்து கொடுக்கும்படியும் தெரிவித்தார். அவர் கேட்பது லஞ்சப் பணம் என்று எனக்கு தெரிய வந்தது. அவர் தனியாக கேட்கும் லஞ்சப் பணத்தை கொடுப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. எனவே திரு.லெனின் RI மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதற்கான ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பையும் நான் தருவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு(sd/-xxxxx)

I received the above complaint on 13.06.2019 at 09.00hrs and after conducting Preliminary Enquiry, I register a case in Vigilance and Anti – Corruption, Chennai City – I Detachment in Cr.No.8/AC/2019/CC –I u/s. 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 today on 13.06.2019 at 10.00 hrs and taken up for investigation. I herewith submit the original F.I.R and the complaint to the Hon'ble Special Judge for the Prevention of Corruption Act Cases, Chennai. I also forward the copy of F.I.R to the officer's concerned.

Sd/- Inspector
13/06/2019

**INSPECTOR OF POLICE,**
**Vigilance and Anti - Corruption**
**Chennai - City - I Dett,**
**Chennai - 16.**